ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1885/30 - 2014 ඔක්තෝබර් මස 21 වැනි අඟහරුවාදා - 2014.10.21

*1885/30 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978* (xii)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*20 (4) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20 (4) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியன்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் அலுவல்களின் நிர்வாகம் பாரதூரமாக சீர்குலைந்துள்ளதெனத் திருப்திப்படுவதன் மேல் மேற்கூறப்பட்ட சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச் சட்டத்தின், துணைவிதியின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின் நியதிகளின்படி திருகோணமலை வளாகத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்திற்காக திருகோணமலை வளாகத் தலைவருக்குப் பதிலாக தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்காக பேராசிரியர் ரஞ்சித் பிரேமலால் டி சில்வா என்பவரை 2014, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருமாறு இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.*

*திசாநாயக்க முதியன்சலாகே*
*சுமணவீர பண்டா திசாநாயக்க,*
*உயர்கல்வி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2014, ஒற்றோபர் 17.*

*11- 91*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*